எண்.5/7/3/7/பதிவாளர்/பால்வளம்/2018/PF/108

புதுச்சேரி அரசு

கூட்டுறவுத்துறை (பால் வளம்)

வி.வி.பி. நகர், தட்டாஞ்சாவடி, புதுச்சேரி - 605 009.

----

புதுச்சேரி, நாள். 24.07.2023

**சுற்றறிக்கை**

பொருள்: கூட்டுறவு துறை - பால்வளம் - பிரதம கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் ஆயுத பூஜை செலவு - தொடர்பாக.

பார்வை: 16.07.2008 தேதியிட்ட கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரின் சுற்றறிக்கை எண்.5/11/1/23/RCS/PLG/M/2008/322.

---

பார்வையில் கண்டுள்ள கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் சுற்றறிக்கையின்பால் கவனம் ஈர்க்கப்படுகிறது. அதில் சங்கம் பூஜை செலவினம் மேற்கொள்ள ரூ.5000/- என வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனால் பல கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் வரையறுக்கப்பட்ட செலவினத்தை மீறி அதிகபடியாக செலவு செய்து வருவது இவ்வலுவலகத்தால் அறியப்படுகிறது. மேலும், ஆயுதபுஜைக்கு செலவு செய்வதற்காக அனுமதி கேட்டும் பல சங்கங்களில் இருந்து பிரேரணைகள் வருகிறது.

இவ்வலுவலகம் சங்கம் ஈட்டியுள்ள நிகர லாபத்தில் 60% முதல் 70% வரை, உறுப்பினர் ஊற்றும் பாலின் அளவிற்கு ஏற்றாற் போல் விலை வித்தியாச தொகையாக வழங்க அனுமதி அளிக்கப்படுகிறது. மீதமுள்ள 30% இலாபத்தில் சங்கத்திற்கு அத்தியாவசியமாக தேவைப்படும் கணினி, பால் பரிசோதனை கருவி, எடை இயந்திரம் மற்றும் தளவாட சாமன்கள், போன்றவைகளின் கொள்முதல் மற்றும் பழுது நீக்கம் செலவு மேலும் நிர்வாக செலவினங்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே, சங்கத்தை வளர்ச்சிபாதையில் கொண்டு செல்ல, சங்கத்தை மேம்படுத்த மீதமுள்ள 30% இலாபம், சங்கத்தால் பராமரிக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்யாமல் சங்கத்தின் மொத்த இலாபத்தை விலை வித்தியாச தொகையாகவும், ஆயுத பூஜை, என ஒவ்வொரு பண்டிகைக்கும் செலவு மேற்கொண்டால் ஒரு கால கட்டத்தில் செலவினம் சங்கத்தின் இருப்பு நிதியின் பராமரிப்பையும், வணிகத்தையும் கடுமையாக பாதிக்கும்.

எனவே, இனிவரும் காலங்களில் பதிவாளர் சுற்றறிக்கையில் வரையறுத்த ரூ.5,000/- மட்டுமே ஆயுத பூஜைக்கு செலவு மேற்கொள்ளவேண்டும். மேலும், ஆயுத பூஜைக்கு கூடுதல் செலவினம் செய்ய அனுமதி கேட்டு வரும் பிரேரணை பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படாது என தெறிவிக்கப்படுகிறது. தவறும் பட்சத்தில் சங்க தலைவர் மற்றும் செயலாளர் மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவுறுத்தப்படுகிறது.

//ஆணைப்படி//

OFFICE OF THE REGISTRAR OF CO-OPERATIVE SOCIETIES PUDUCHERRY

பால்வள அபிவிருத்தி அதிகாரி
கூட்டுறவுத் துறை

பெறுநர்

தலைவர்/நிர்வாகி,

------------------------------------------ கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம், (அ) எண்.பி.

------------------------------------------

புதுச்சேரி .

நகல்

1. மேலாண் இயக்குனர், புதுச்சேரி கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், } தொடர் நடவடிக்கைகாக
2. துணைப்பதிவாளர், (தணிக்கை) கூட்டுறவு துறை, புதுச்சேரி.
3. The Web Editor.
4. கோப்பு 2023.